Regd. No. M. 4078

ஸ்ரீ:

ஸ்ரீ தந்வந்தரயே நம:

# ॥ वैद्यचन्द्रिका ॥

# வைத்ய சந்த்ரிகா

தமிழ் நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின்
ஆதரவில் நடந்துவரும் மாதப் பத்ரிகை.

Vol. 8 | November, 1946 | Nos. 8 to 11

ஆசிரியர் ;
V. B. நடராஜ சாஸ்த்ரி, ஆயுர்வேதாசார்ய.
வைத்ய விசாரத, வைத்யவாசஸ்பதி.

ப்ரகாசகர் : பண்டித ஸ்ரீ. மே. ஸுந்தரராஜாசார்யர்.

விஷயங்கள்.

ஆரோக்கியசந்த்ரிகா அநுபந்தம். 1—12
ஆரோக்கியம்.
ஸ்ரீ பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார். 1
அறிவிப்பு ப்ரகாசகர். 12
ஆயுர்வேதம். க்ருஷ்ணாத்ரேயன். 1
பாண்டுரோகம். ஸ்ரீ எஸ். வி. ராதாகிருஷ்ண சாஸ்த்ரீ 8
ஸ்ரீ தன்வந்தரி ஜயந்தீ, ஆசிரியர். 15
குறிப்புகள். 16
செய்திகள். 19

வருஷச்சந்தா ரூ. 3—0—0

# குறிப்பு

வைத்ய சந்த்ரிகையில் பிரசுரம் செய்ய வேண்டிய விஷயங்கள், கட்டுரைகள் முதலிய அநுப்ப வேண்டிய விலாஸம் :—

ஆசிரியர், வைத்ய சந்த்ரிகா,

ஆத்ரேய ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,

தென்னூர் ரோடு, திருச்சினுப்பள்ளி.

வைத்ய சந்த்ரிகையின் சந்தா, விளம்பர விகிதங்கள் மற்றும் தமிழ் நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் ஸகல விஷயங்களையும் குறித்து எழுத வேண்டிய விலாஸம் :—

வைத்ய வாசஸ்பதி பண்டிட் P. S. ராமசர்மா,

பொதுக் கார்யதர்சி,

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்,

கரூர். (திருச்சி ஜில்லா)

ஸ்ரீ தந்வந்தரயே நம:

# ஆரோக்கியசந்த்ரிகா—அநுபந்தம்.

## ஆயுர்வேதத்தின் முக்கியோத்தேசம்

## ஆரோக்கியம்.

[வைத்திய ரத்னம் பண்டித எம். துரைஸ்வாமி ஐயங்கார், ஆயுர்வேத பூஷணம், ஆயுர்வேதாசார்ய, சென்னை.]

எனது நண்பர் ஸ்ரீமான் ஆயுர்வேதாசார்ய நடராஜ சாஸ்த்ரீ அவர்கள் வைத்தியசந்திரிகைக்குப் பத்திராசிரியராக ஆனதும், அப்பத்திரிகைக்குக் கட்டுரை எழுதவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். அவரது இஷ்டத்திற்கு இணங்கி முதன்முதலில் எவ்விதக் கட்டுரை யெழுதலாம் என்று யோசித்தேன். ஆயுர்வேதம் ஆவிர்ப்பவித்ததின் ஆதி உத்தேசத்தையும், அச் சாஸ்திர ஸம்பந்தமான நூல்களிற் பெரும்பாலும் ஆரம்பத்திற் கூறப்படும் முக்கியவிஷயம் ஆரோக்கிய முறையைப் பற்றியதாயிருப்பதையும் ஆலோசித்தேன். உடனே நமது நண்பரது பத்திரிகைக்கு நான் அனுப்பும் எனது முதல் நிருபமும் ஆரோக்கிய ஸாதனமான ஆசாராதிகளைப் பற்றியதாயிருப்பதே பொருந்தும் எனக் கருதி இவ்வியாஸம் எழுத முயன்றேன்.

ஆயுர்வேதத்தின் முதல் ப்ரவர்த்தகர்களான ஆத்திரேயர் பரத்வாஜர் முதலிய முனிவர்கள் ஸ்வஸ்த்தவ்ருத்தத்தை அதாவது ஆரோக்கிய வாழ்க்கையை விளக்குவதே ஆயுர்வேதத்தின் முதற் கொள்கை என்று ஐயமறக் கூறி கிரந்தங்களை ஆரம்பிக்கிறார்கள். சரீரத்திலடங்கிய இரஸ ரக்தாதி தாதுக்களும், வாத பித்த கபங்கள் என்னும் தோஷங்களும் அவற்றிற்கு இயல்பான சமநிலைமையில் இருக்கவேண்டிய உபாயங்களை உபதேசிப்பதே இச்சாஸ்திரத்தின் பயன் **‘धातुसाम्यक्रिया चोक्ता तन्त्रस्यास्य प्रयोजनम्’** என்கிறார் சரகர். தாதுஸாம்யம் என்றால் ஸ்வாஸ்த்யந்தான். அதாவது முற்

றிலும் ஆரோக்கியமாயிருத்தலேயாம். இந்நிலைமையைத் தான் 'समधातुमलक्रियः । प्रसन्नात्मेन्द्रियमनाः स्वस्थ इत्यभिधीयते' —" தாதுக்களும் தோஷங்களும், உட்புற வெளிப்புற அவயவங்களின் வேலைகளும் இயற்கை நிலை தவறாது ஒழுங்காயிருக்க, உள்ளமும் உணர்ச்சி தரும் உருப்புகளும் அந்தராத்மா உட்பட தெளிவு பெற்றிருந்தால், அந்நிலைமையைச் சுகநிலைமை என்பார்கள்" என்றவாறு ஸுச்ருதாதிகளும் கூறியிருக்கிறார்கள்.

இம்மையில் இனிது ஆரோக்கியமாய் வாழ்வதற்கு மாத்திரமல்ல; மறுமையில் ஜீவன் கடைத்தேறுவதற்குங் கூட தாது ஸாம்யாதி நிலைமை இன்றியமையாச் சாதனமென்று வைத்திய சாஸ்திரஜ்ஞரைப் போலவே வைதிக முறையில் கருத்துள்ள வேதாந்திகளும் கசடறக் கூறியிருக்கிறார்கள். அபீதிஸ்தவம் என்னும் ஸ்தோத்ர க்ரந்தத்தில்—

"स्थिते मनसि विग्रहे गुणिनि धातुसाम्ये सति स्मरेदखिलदेहिनम्"

என்று ஸ்ரீ வேங்கடநாதன் இவ்விஷயத்தை விளங்கக்கூறியிருக்கிறார். உலகமனைத்தையும் உடலாகப் பெற்ற கடவுளைத் தியானிக்க வேண்டிய நிலைமை நமக்கு ஆரோக்கிய நிலைமையே யாகும் என்று குறிப்பிடும் வகையில் ஆரோக்கிய நிலைமை இத்தகையது என்றும் ஆயுர்வேதப் பிரமாணத்தை மனத்திற் கொண்டு அந்த ச்லோகத்தை அவர் இயற்றியிருக்கிறார். 'ஸ்திதே மநஸி' என்பதால் 'ப்ரஸந்நாத்மேந்த்ரிய மநா:' என்பதையும், "விக்ரஹே குணிநி" என்பதால் 'ப்ரஸந்நாத்மா' என்பதையும், 'தாதுஸாம்யே' என்பதால் 'ஸமதாது:' என்பதையும் வேண்டுமென்றே வேதாந்த தேசிகன் அனைவருடைய அபயத்தையும் தேஹாத்ம ஸுகத்தையுங் கோறி கூறியிருப்பதாக விளங்குகிறது. 'அனைவரது நன்மைக்கும் அவச்யமான அறநெறி நன்கு நிறைவேறுவதும் ஆரோக்கியமுறையைக் காரணமாகக் கொண்டது' என்கிற உண்மையை உள்ளத்திற் கொண்டே காளிதாஸ மஹாகவியும் 'சரீரமாத்யம் கலு தர்மஸாதனம்' என்று எடுத்துக் காட்டியிருக்கிறார். ஆயுர்வேதத்தை லௌகிகர்களைப் போல் வேதாந்திகளும் ஆதரிப்

பதற்கான முகாந்தரங்கள் பல உண்டு. ஆஸ்திகர்கள் வேதத்தையும், தர்மசாஸ்த்ராதிகளையும் ஆப்தாகமம் என்பார்கள். ஆயுர்வேதமும் அப்படியே ஆப்தாகமமாகும்.

'आयुर्वेदश्चाप्तागमः । यतः स शिष्टानुमतो लोकानुग्रहप்रवृत्तः शास्त्रवादः'

'சான்ருேரால் நன்றென்று அனுமதிக்கப் பெற்றதும், உலகத்தோர் உய்வதற்காகத்தோன்றியதுமாகையால் ஆயுர்வேத சாஸ்திரக் கொள்கையும் ஆப்த வசனமாகும்' என்கிருர் அக்னிவேசர். 'இவ்வுலகிலும் அவ்வுலகிலும் பெறக்கூடிய இன்பமனைத்தும் இவ்வாயுர்வேத சாஸ்திரக் கொள்கையைப் பொருந்தியுள்ளது'. 'अत्रायत्तं ऐहिकामुष्मिकं श्रेयः' என்கிருர் தன்வந்தரியும்.

அவ்வித ஆரோக்கியத்தை அடைவதற்கான உபாயங்களுள் இந்த்ரியங்கள், மனம் இவற்றின் மூலமாயுண்டாகும் ஆசா பாசங்களை அளவு மீருது அடக்கி ஆள்வதையே மிகச் சிறந்த முக்கியோபாயமாகச் சரகாதி மஹரிஷிகள் விளக்கி யிருக்கின்றனர். ஆகவே இந்த்ரியங்களின் இயக்கங்களை ஆள்வதற்கான உபாயங்களையும் உபதேசிப்பதற்கென்று சரகர் இந்த்ரியோபக்ரமணீயம் எனத் தனியாக ஓர் அத்தியாயத்தையும் தமது ஸம்ஹிதையில் இயற்றியிருக்கிருர். இதை விளக்கும் போது நாம் சாஸ்திரீய பரிபாஷையிற் செல்ல நேரிடுகிறது. தேஹாரோக்கியத்தைப் பரிபாலித்து, ஆத்மாவையும் உஜ்ஜீவிக்கச் செய்யக் கருதுவோமாயின், மனம் இந்த்ரியங்கள் ஆகியவற்றைப் பிரக்ருதி பாவத்திற் கட்டியாண்டு, பஞ்சபஞ்சக ஸ்வரூபங்களையும்,* மனதின் தத்துவத்தையும் உள்ளபடி ஆராய்ந்து அறிந்து கொள்வது முதற்காரியம் எனப் படுகிறது. இந்த்ரியங்களைப் பற்றிய ஸூக்ஷ்மாம்சங்களை இங்கு விவரிக்க இயலாவிடினும், மனதின் தன்மையைப் பற்றி மாத்திரம் மிகச் சிறிதேனும் விளக்குவது அவச்யமாகிறது. ஏனெனில், ரூப ரஸாதி விஷயங்களை விளங்கக் கிரஹிக்க நமக்கு

---

* பஞ்சபஞ்சகம்:— (1) பஞ்சேந்த்ரியங்கள், (2) பஞ்சேந்த்ரிய திரவ்யங்கள், (3) பஞ்சேந்த்ரியாதிஷ்டானங்கள், (4) பஞ்சேந்த்ரியார்த்தங்கள், (5) பஞ்சேந்த்ரிய புத்திகள் என்பனவாம்.

வெவ்வேறு தனிக் கருவிகள் நேத்திராதி ரூபமாய் அமைந்திருக்கின்றன.' அதீந்த்ரியமான மனதோ சிந்தனை, தியானம், ஸங்கல்பம் முதலிய பிரத்தியேக விஷயங்களில் இயங்கவேண்டியிருப்பதுடன், தனித்தனி இந்த்ரிய விஷயத்திலும் அவ்வப்பொழுது அல்லது இடையறுது தன் கவனத்தைச் செலுத்த வேண்டியிருப்பதால், ஒரு புருஷனுடைய அந்தக் கரணத்திலிருந்து* ஒவ்வோர் இந்த்ரியத்தினூடே மனோ வ்ருத்திக்குப் பல முகமாய் ஒரே காலத்திலும் அடுத்தடுத்தும் பிரவ்ருத்தி யுண்டாவதால், அதன் கார்யம் அஸாதாரணமானது எனக் கருதப் படுகிறது. அவ்வித உள்ளமும் உடலும் சேர்ந்தும் தனித்தனியாகவும் நோய்களுக்கு ஆதாரமாவதால் ஆரோக்கிய விஷயத்தைக் கூறும் போது மனோ நிலைமையைப் புறக்கணிப்பதற்கில்லை.

"शरीरं सत्त्वसंज्ञं च व्याधीनाम् आश्रयो मतः" என்றல்லவோ சரகர் கூறுகிறார். ஸத்வத்தின் பிரவிருத்தி அடிக்கடியும் அநேக விதமாயிருப்பதைக் கருதி, சேதநாதாதுவான புருஷன் ஒருவனாயினும், சைதந்யவியஞ்ஜகமான சித்தமும் அநேக பிரகாரம் எனப் படுகிறது.

"स्वार्थेन्द्रियार्थसंकल्पव्यभिचरणात् अनेकमस्मिन् पुरुषे सत्त्वम्"

என்று சாஸ்திரம் கூறுகிறது. இச்சாஸ்திரீய விஷயத்தை இனி இங்கு விவரிக்க நான் கருதவில்லை. இந்த்ரியங்கள் தனித்தனியாகவோ, சேர்ந்தோ அவற்றிற்குள்ள விஷயங்களிற் செல்லும் போது மனத்தை முன்னிட்டுக்கொண்டே முயல வேண்டும்; அன்றேல் அததற்குற்ற விஷயத்தை அவை கிரஹிக்க இயலாதனவாகும்; ஆகவே, சாரீரமானஸிக வியாதிகளைத் தடுக்க இந்த்ரியங்களைப் போலவே மன

---

* அந்தக்கரணம் என்பது ஆந்தரமான இந்த்ரியம் எனப்படும். மனம் அதீந்த்ரியமானது. அது சேதநாவ்ருத்திக்கு வியஞ்ஜகமானதால் சித்தம் அல்லது சேதஸ் எனப் படுகிறது. இது சேதநாதாதுவான ஆத்மாவுக்கும் விஷயங்களுக்கும் ஆயத்தமாயிருந்து இயங்குந் தன்மையது. வைத்திய சாஸ்திரத்தில் சேதஸ்ஸை 'ஸத்வம்' என்றும் வழங்குவோம்.

த்தின் இயக்கத்தையும் முக்கியமாக ஊக்கங் குன்ருது கார்க்க வேண்டுமென்று மாத்திரம் சுருங்கக் குறிப்பிடுகிறேன்.

புத்தி யென்னும் மற்ருெரு தத்வத்தைப் புறக்கணித்து ஆரோக்கிய—ஆத்யாத்மிக விஷயங்களை அறியப் புகுவது அஸாத்யம். உடலைக் காக்கவும், ஆத்மாவை உஜ்ஜீவிக்கச் செய்யும் உற்ற உபகரணங்களாய் பாஹ்யேந்த்ரியங்களையும் அந்தக்கரணத்தையும் அமைத்து, அவ்விந்த்ரியங்களையும் ஜீவனையும் புத்தி யென்னும் ஓர் அபூர்வமான அதீந்த்ரியக் கருவியைக்கொண்டு கட்டியாள்வதற்காக ஈச்வரன் இணைத்திருக்கிருன். இத் தத்துவங்கள் இசைந்திருக்கும் வகைகளையும், அவற்றின் இயங்கும் உபயோகங்களையும் விமர்சம் செய்து, ஆரோக்கிய பரிபாலனத்திற்கும் ஆத்யாத்மிக ஸ்வரூப ஜ்ஞானத்திற்கும் உள்ள நெருங்கிய ஸம்பந்தங்களை ஆயுர்வேதாசார்யர்கள் இரஸாயன பாதாத்தியாயம் முதலிய பிரகரணங்களிற் கசடறப் பிரஸ்தாவித்திருக்கிருர்கள். ஆத்யாத்மிக சாஸ்திரத்திலும் ஆயுர்வேதத்திலும் உள்ள அகப் பொருட்களின் ஆழமறிந்த ஆனந்தராயமகியானவர் ஆரோக்கிய மார்க்கத்தில் வைத்தியர் வைத்தியரல்லாதார் ஆகிய அனைவருக்கும் ஒருங்கே ஆவல் உண்டாக்கக் கருதி, பிரத்தியேகமாய் இயற்றிய ஓர் அபூர்வ நாடகத்தில் பின்வருமாறு கூறுகிருர். "விஜ்ஞானம் என்னும் விசேஷ அறிவினல் சிரிய ஸம்ஸ்காரத்தையும் வலிவையும் பெற்றது புத்தி; அப்புத்திக்கு மனது வசப் பட்டது; ஜீவாத்மாவானவன் பௌதிக சரீரமாகும் நகரத்திற்கு அரசனெனக் கூடிய நிலைமையை யடைந்து, அம் மனதென்னும் ஊழியனையும் அதற்குக் கீழ்ப்பட்ட இந்த்ரியங்கள் என்னும் மற்ற ஊழியர்களையும் அடக்கியாண்டு, அவற்றைக் கொண்டு அரும் பெருங் காரியமான ஆரோக்கியத்தையும் ஆத்யாத்ம தத்துவத்தையும் கடைபிடிக்க அதிகாரியாக்கப்படுகிருன்." இத் தத்துவத்தைக் கூறும் ஜீவாநந்தந பத்தியம் பின் வருமாறு :—

उद्दायबुद्धिविभवेन मनस्तु तत्र विज्ञानशर्मसचिवेन वशीकृतं सत् ।
कार्ये महत्यधिकृतं हितकारि राज्ञः सर्वात्मनाप्यनुसरत्यधुना तमेव ॥

பகுத்தறிவுக்கு இன்றியமையாக் கருவியான புத்தி சக்தியை யுபயோகித்து, மனதையும் இந்த்ரியங்களையும் ஒழுங்கான வழிகளிற் செலுத்தி ஸ்வாஸ்த்யமென்னும் ஆரோக்கிய நிலைமையை நிலைக்கச் செய்ய அடிப்படையான சில உபாயங்களை ஆயுர்வேதாசிரியர்கள் உபதேசித்திருக்கின்றனர்.

"தேஹத்திற்கும் ஆத்மாவுக்கும் இதத்தைத் தேடும் ஒவ்வொருவரும் சான்றோர் உவக்கும் ஒழுக்கத்தில் சிறிதும் ஊக்கங் குன்றாது நாம் தினந்தோறும் நடந்து வர வேண்டும். இந்த்ரியங்களுக்கு முற்றிலும் ஸாத்மியமாயுள்ள அர்த்தங்களென்கிற விஷயங்களுடன் ஸம்பந்தமிருக்கப் பார்க்க வேண்டும். புத்தியைக் கொண்டு புலன்களையும் பராமரித்தவாறு, நாம் செய்யப் புகும் எக் காரியத்தையும் வெகு நுட்பமாக ஏற்றது ஏற்காததென்கிற ஆராய்ச்சி மூலமாய் அலசிப் பார்த்துப் பகுத்தறிவுடன் செய்யவேண்டும். இவ்வாறு அனுஷ்டிப்பதானது ஆரோக்கியாபிவ்ருத்தி, இந்த்ரிய ஜயம் என்னும் இருவகைப் பெரும் பேறுகளை ஒருமிக்க நிகழ்த்தி வைக்கும்." இதற்கு ஆதாரமான பிரமாண வாக்கியம் பின் வருமாறு :—

आत्महितं चिकीर्षता सर्वेण सर्वं सर्वदा स्मृतिमास्थाय सद्वृत्तमनुष्ठेयम् । तद्ध्यनुष्ठानं युगपत् संपादयत्यर्थद्वयं आरोग्यमिन्द्रियविजयं च "

என்று உபதேசிக்கிறார் உபயலோக ஹிதைஷியான அக்னிவேச முனிவர்.

அம் முனிவர் 'இந்த்ரியோபக்ரமணீயாத்யாயத்தில் ஆத்மார்த்தங்களுக்கு மாத்திரமல்ல; ஆரோக்கிய நிலைமையை நிலைநிறுத்திக் கொள்ளவும் சரிவர நடத்தும் ஸதாசாரங்கள் அனைவருக்கும் இன்றியமையாததென்னும் கொள்கைக்கு அநுகுணமாக இம்மை மறுமைகளில் இன்பம் பெறுவதற்கான சான்றோர் உகக்கும் நல்லொழுக்க முறைகளை விஸ்தாரமாக விளக்குகிறார். " तस्मात् सद्वृत्तमखिलेनोपदेक्ष्यामः "— " நல்லொழுக்கங்களை முற்றிலும் உலகத்தோருக்கு உபதே

சிக்கின்றோம்" என்று ஆரம்பித்து அழகிய எளிய வாக்கியங்களில் சுகாதார முறைகளைப் பின் வருமாறு கூறுகிறார். "நாள் தோறும் இரு முறை நீராடவேண்டும். நாசி, செவி நேத்திரம் குதம் பாதங்கள் முதலிய மலாயதனங்கள் என்கிற அழுக்கு சேரும் அவயவங்களை அடிக்கடி அலம்பி அக்கழுக்கில்லாமல் இருக்கப் பார்க்கவேண்டும். தலைமயிர், மீசை, தாடி, நகங்கள் முதலியவற்றைப் பக்ஷத்திற்கு மூன்று முறை க்ஷௌராதிகளைச் செய்து விலக்கி சுத்தமாக்கவேண்டும். விரும்பத் தக்க வேஷமுள்ளவனாய், விடுத்து உலர்த்திப் பரிசுத்தமாகச் சீர்திருத்திய தலைமயிருள்ளவனாய், தினந்தோறும் தலை முதலியதில் தைலம் தேய்த்து அப்யங்கம் செய்து கொண்டவனாய், எப்பொழுதும் பரிசுத்தமான உடைகளோடு கூடியவனாகவும் இருப்பது அவசியம்."

"द्वौ कालावुपस्पृशेत् । मलायतनेष्वभीक्ष्णं पादयोश्च वैमल्यमादध्यात् । त्रिः पक्षस्य केशश्मश्रुरोमनखान् संहारयेत् । साधुवेषः प्रसाधितकेशः मूर्ध-श्रोत्र-घ्राण-पादतैलनित्यो नित्यचहतवासाः स्यात्"

என்பது அவ்வுபதேச மொழிகளில் ஒரு பகுதி.

மரியாதைகளையும் அன்பையுங் காட்டும் மனுதர்மமும் மனிதருடைய ஆரோக்கிய நிலைமையைக்காக்கும் காரியங்களிற் பங்கெடுத்துக் கொள்ளும் என்னும் உண்மையையறிந்து வேறு பல இனிய ஆசார முறைகளும் கூறப்படுகின்றன. நாம் அவற்றைக் கருத்துடன் பின்பற்றி நடப்பதால் உலக வாழ்க்கையில் நன்மை பெறுவதுடன், மனக்களிப்பையும் உடற்சுகத்தையும் அடையலாம். அவ்வினிய ஒழுக்க முறைகளைப் பற்றிய விரிவான உபதேசமொழிகளிலிருந்தும் சிலவற்றைச் சுருங்க எடுத்துரைக்கின்றேன் :—

" எவரைச்சந்தித்த போதும் நாம் முன்னதாகப்பேசத் தொடங்குவது நலம். மேலும் பிரஸன்னமான சிரித்த முகமுள்ளவனாய், ஆபத் பந்துவாய், உதாரசீலனாய், இத

மாகவும் மிதமாகவும் பேசுந்தன்மையனுய், தர்ம சிந்தையுள்ளவனுய், ஹேதுவிலன்றிப் பலவிற் பொருமை யுருதவனுய், கவலையற்றவனுய், தைர்ய சாலியாய், உத்ஸாஹ சீலனுய், எளியோரிடம் இரக்கங் கொண்டவனுய், ஆஸ்திகனுய் இருத்தல்வேண்டும். அன்றியும், எல்லா உயிரினங்களிடமும் உறவினனைப் போல் அன்பு பாராட்டுவதும், சினங்கொண்டு சீறுபவரைச் சாந்தமொழிகொண்டு வழிப்படுத்துவதும், பயந்தவர்களுக்குத் தேறுதல் கூறி அமைதி உண்டாக்குவதும், துன்புற்றவர்களை அன்பு காட்டி ஆதரிப்பதும், எப்பொழுதும் உண்மை பேசுவதும், சண்டை சச்சரவின்றி ஸமாதானமாயிருக்கப் பழகுவதும், பிறர் கூறும் கடுஞ் சொற்களைக் கேட்டு மனம் பதருமல் பொறுத்துக் கொள்வதும் ஆக இவை முதலியவை தேஹமனே நிலைமைகளிற் சுகம் பெறுவதற்கு இன்றியமையா நன்னெறிகளாகும்." மேலும், "அஹங்காரம் தகாது. அஸூயை கூடாது. மூத்தோர்களையும் குருமார்களையும் அரசர்களையும் அவமதித்தலாகாது. வீண் வார்த்தைகள் பேசலாகாது. காரியம் செய்ய வேண்டிய காலங்களைத் தவறலாகாது. எதையும் யோசிக்காமற் செய்யலாகாது. இந்த்ரியங்களின் போக்கில் ஈடுபட்டு மனம் போனபடி செய்யக் கூடாது. புத்திக்கும் இந்திரியங்களுக்கும் ஆயாஸந்தரலாகாது. கோபத்திஞல் அல்லது பெருமகிழ்ச்சியாலான மனவெழுச்சியை யநுஸரித்து உடனே எதையும் செய்து விடக் கூடாது. கார்ய ஸித்தியில் அடங்காப் பெருமையையும், கார்யம் கைகூடாமற் போகையில் மனத் தளர்ச்சியையும் அடைவது தகாது. பிரக்ருதி என்னும் இயற்கையின் நிகழ்ச்சிகளை நினைத்து மனே தைர்யத்துடன் நடப்பது தான் நலம். பிரஹ்மசர்யம், அறிவு, அன்பு, கருணை, பொறுமை இவற்றிற் கருத்துடன் உலகில் பழக வேண்டும்." இவ்வாறு நல்லொழுக்கமுள்ளவர்களுக்கு ஆரோக்கியமும் ஆயுளும் பெருகுமென்று சரகாதிகள் உபதேசிக்கிருர்கள். இந்த்ரியோபக்ரமணீயத்திலுள்ள மூல வாக்கியங்களை எடுத்தெழுதவும், அவ்விஷயங்களை முற்றிலும் மொழிபெயர்த்துக் கூறவும் இடமில்லை.

உலக தத்துவங்களை உள்ளபடி அறிந்த ஆயுர்வேத ஆசிரியர்கள் உபதேசித்துள்ள ஆரோக்கிய மார்க்கங்களை நாம் புறக்கணிப்பதாலேயே பலவகை ரோகங்களுக்கும், மனக் கோளாறுகளுக்கும் உள்ளாகி வீண் துன்பங்களை அனுபவிக்கின்றோம். "நாம் விவரித்துள்ளபடி ஆரோக்கிய முறையைப் பின்பற்றி நடப்பவர் நூறுண்டளவும் இனிது வாழ்ந்து, சான்றோர் உகக்க நற்பெயருடன் ஜீவித்துவருவார்கள்; அறம் பொருள் இன்பங்களில் ஈடுபட்டு, தமக்கும் பிறருக்கும் அனுகூலமா யிருந்து வருவார்கள். அவருக்கு இவ்வுலகிலும் மேலுலகிலும் பேறுகள் நிரம்பவும் தோன்றும். ஆகவே அனைவரும் நன்னெறி தவறாது நாமுபதேசித்தவைகளைக் கூர்ந்து அனுஷ்டிப்பீர்களாக" என்கிறார் சரகர். அந்த ச்லோகங்கள் பின் வருமாறு:—

स्वस्थवृत्तं यथोद्दिष्टं यः सम्यगनुतिष्ठति ।
स समाः शतमव्याधिरायुषा न वियुज्यते ॥

नृलोकमापूरयते यशसा साधुसंमतः ।
धर्मार्थाविति भूतानां बन्धुतामुपगच्छति ॥

परान् सुकृतिनो लोकान् पुण्यकर्मा प्रपद्यते ।
तस्मात् वृत्तमनुष्ठेयमिदं सर्वेण सर्वदा ॥

நான் இதுவரையில் கூறியதிலிருந்து ஆரோக்கிய ஸித்திக்கு சாரீர சுத்தியும் மானஸிக சுத்தியும் மிகவும் அவசியம் என்றும், அவற்றிற்கு ஸதாசாரங்கள் இன்றியமையாச் சாதனங்கள் என்றும் வாசகநேயர்கள் உணர்ந்திருக்கலாம். மீதூண் விரும்பாமல் ஆஹார சுத்தியும் ஆத்ம சுத்தியும் ஒருங்கே இருந்து வந்தால், ஆயுளும் ஆரோக்கியமும் வளர்ந்து வருமென்பதற்கு அநேக த்ருஷ்டாந்தங்களைக் கூற முடியும்.

ஸ்ரீவைஷ்ணவர்களின் முக்யாசார்யர்களுள் ஒருவரான வேதாந்த தேசிகன் மிகவும் நைஷ்டிகராயிருந்து ஸதாசாரங்களிலிருந்து மயிரிழை பிறழாது இருந்து வந்தார் என்

பது அனைவரும் அறித்த விஷயம். அஹரஹ்யஹநி உஞ்சவ்ருத்தி செய்து உயிர் பிழைத்து வந்தார். साग्रं वर्षशतं जीवेत् என்கிற முதுமொழியின் படி நூற்றெட்டு ஆண்டுகள் பிறர் உதவி ஏதும் எதிர்பாராது ஆரோக்கிய சாலியாய் ஸதாசார சீலராய் லோகோஜ்ஜீவனார்த்தமாய் உயிர்பிழைத்திருந்து, பூதவுடல் துறந்தார். அவர் ஆத்யாத்மிக சாஸ்த்ரப் பிரவசனத்திலேயே ஆயுள் காலத்தைக் கழித்தாராகிலும், ஆயுர்வேதம் முதலிய மற்றைய சாஸ்த்ரங்களிலும் அவருக்குப் பயிற்சியும் இருந்ததாகத் தெரிகிறது. அவர் ஆயுர்வேத விஷயமாய்க் கூட ஒரு க்ரந்தம் எழுதியிருப்பதாகக் கேள்வி. ரஹஸ்யத்ரயஸாரம் என்கிற ஸம்ப்ரதாய க்ரந்தத்தில் வாக்படனைப் பற்றியும் பிரஸ்தாபித்திருக்கிறார். ஆரோக்கியத்தைக் காப்பதில் நல்லொழுக்கம் மிகவும் அவசியமானதென்பதற்கும், அவ்விஷயத்திலும் பொதுவாக ஆயுர்வேதத்திலும் அம் மஹானுக்கு எவ்வளவு விசேஷ ஜ்ஞானம் இருந்ததென்பதற்கும் இரண்டொரு பிரமாணங்களை அவருடைய கிரந்தத்திலிருந்து எடுத்துக் குறிப்பிடுவது இக்கட்டுரையின் இறுதியிற் பொருத்தமாயிருக்கும். க்ஷேத்ரஜ்ஞனுக்கு* முக்தியுண்டாகக்கூடிய மங்களோதய ஸந்தர்ப்பத்தில், ஸங்கல்ப ஸூர்யோதயத்தின் அந்திம கட்டத்தில் ஆயுர்வேத ரஹஸ்யார்த்தத்தை ஆத்யாத்மிக தத்துவத்துடன் இணைத்திருக்கும் வகை வெகு இரஸமானது.

भिषज्यति भवं प्रभौ पितरि शेषिणि श्रीपतौ
अपथ्यविनिवर्तकं किमपि भद्रमभ्यर्थये ।

இப்பத்தியத்தின் கருத்துரை கேவலம் ஸாஹித்யம் வல்லோருக்கு அவ்வளவு எளிதில் இரஞ்ஜகமாகத் தோன்றாது. ஸாஹித்யம், வேதாந்தம், வைத்தியம் ஆகிய அனைத்திலும் ஈடுபட்ட வேதாந்த தேசிகனால் தான் இவ்விதம் எழுத முடிந்தது. "ஸர்வேச்வரனும் ஜகத் பிதாவுமான

* வேதாந்தாதி சாஸ்த்ரஜ்ஞர் ஜீவாத்மாவை க்ஷேத்ரஜ்ஞன் என்று வழங்குவர்.

ச்ரிய:பதிதான் வைத்யனுயிருந்து* ஜீவாத்மாவுக்கு அநாதி காலமாய் நேர்ந்திருக்கிற பவம் (ஸம்ஸாரம்) என்னும் பொல்லாத வியாதியை நிவ்ருத்தி செய்ய முன் வந்திருக்கிறார். ஈச்வரன் ஸர்வ சேஷியானதால், தன் சேஷபூதனை ஜீவாத்மாவை உஜ்ஜீவிக்கச் செய்வது அவரது கடமையாய்விட்டது. ஸம்ஸாரமென்னும் நீடித்த பலமான நோயைப் போக்கி, அவனுக்கு அபவர்கமென்னும் அழிவற்ற ஆரோக்கிய நிலைமையை அளித்து விட உத்தேசித்திருக்கையில், ஹேய விஷயங்களென்கிற அபத்தியங்கள் ச்ரேயஸ்ஸுக்கு இடையூருக நேரிடாதபடி நிவ்ருத்தியாய், அவ்வமோகமான சிகித்ஸை நல்லபடி நிறைவேற வேண்டுமேயென்று கவலையுற்று, தன் முயற்சி ஸபலமாய் ஜீவாத்மாவுக்கு மோக்ஷ ரூபமான (வியாதி—ஸம்ஸாரம் இவற்றின் விடுதலையுருவமான) க்ஷேமம் உண்டாக வேண்டுமென்று” விவேகன் விரும்புகிருன்.

அபத்யமென்பது விலகிப் போக இருக்கும் வியாதியை வலிய விருத்தி செய்வது. இது ஆயுர்வேதத்தில் ஒரு முக்யமான அம்சம். ஜீவாத்மாவானவன் வியாதிகளிடமிருந்து விடுபட்டு முற்றிலும் தேஹத்தில் பலம் பெற்று விடக்கூடிய நிலைமையுண்டாவதாகத் தெரிந்ததும், இராஜயக்ஷ்ம மந்த்ரியான பாண்டு அபத்யதா என்கிற மனதையும் இந்த்ரியங்களையும் மயக்கச் செய்யும் தாஸியைக் கூப்பிட்டு, “ஜீவனிடம் சென்று, அவனை மயக்கி அபத்தியமான ஆஹார விஹாரங்களை உபயோகிக்கத் தூண்டுவாயாக”.— “जीवं प्रविश्य तमपथ्येषु आहारविहारादिषु नियोजय” என்று ஜீவாநந்தத்தில் உத்தரவிடுகிருன்.

பத்தாம் அங்கத்து முடிவில் (ஸங்கல்பஸூர்யோதயத்தில்) மறுபடியும் வேதாந்த தேசிகன் கூறும் மற்ருெரு விஷயமும் ஆரோக்ய நிலைமைக்கும் ஆத்மா நிச்ரேயஸத்தை அடைவதற்கும் அந்யோந்ய ஸம்பந்தம் பலமாயிருப்பதை விளக்குகிறது. “ஸம்ஸாரமாகும் பிணியை அகற்றுவதில்

* “வைத்யோ நாராயணோ ஹரி:” என்று பெரியோர் அநுஸந்திப்பர்.

இணையற்ற வைத்தியன் விவேகன். சாரீர தோஷங்களான வாத பித்த கபங்களின் கோளாறுகளோடு கர்மஜமான தோஷங்களும், ரஜஸ் தமஸ் முதலிய தோஷங்களோடு மான தர்ப்பாஹங்கார மமகாராதி மானஸிக தோஷங்களும் முற்றிலும் அவ் விவேகனென்னும் வைத்திய நிபுணனால் விலக்கப் பட்டுப் போயின."

भवरोगैकभिषजा विवेकेन विपश्चिता ।
शमं दोषगणो नीतः शारीर इव मानसः ॥

ஆரோக்கியத்தையும், அதன் மூலமாய் ஆயுளின் அபிவிருத்தியையும் கோறுபவர் ஆசார சீலர்களாய், நற்குணம் நிரம்பியவராயிருந்து உடற் சுத்தியிலும், உள்ளம் கள்ளம் கபடற்று உதாரத் தன்மையாயிருந்து வருவதிலும் கருத்தாயிருத்தல்அவசியமென்பதையே இக்கட்டுரையின் மூலம் வாசக நேயர் உணரவேண்டுமென்பது எனது கருத்து.

---

## அறிவிப்பு.

மண்டலத்தின் வருஷச் சந்தா ரூபாய் 3-0-0ஐ பொதுக் கார்யதர்சிக்கு தயவு செய்து உடனே அநுப்பி விடவும். 30-11-46க்குள் சந்தா செலுத்தாதவர்கட்கு டிஸம்பர் முதல் வாரத்தில் வைத்ய சந்த்ரிகை V. P. மூலம் ரூபாய் 3-3-0க்கு அனுப்பப் படும். சந்த்ரிகைக்கு டிஸம்பருடன் வருஷ முடிவு. புதிய மெம்பர்களுக்கு வருஷாரம்பம் முதல் எல்லா சஞ்சிகைகளும் அநுப்பப் படும்.

—ப்ரகாசகர்,

ஸ்ரீ தந்வந்தரயே நம:

# ஆயுர்வேதம்

**[கிருஷ்ணாத்ரேயன்]**

*[ஆயுர்வேத தத்துவங்களை அறிய அற்ப ப்ரயாஸை கூட எடுத்துக் கொள்ளாமல், ஆயுர்வேதத்தை விமர்சம் செய்ய கலிபலத்தினால் கிளம்பிய பிராக்ஞம்மானிகளுடைய துர்வாதங்களை ஸஹிக்காமல் ஆயுர்வேதோபதேஷ்டா கிருஷ்ணாத்ரேய முனிவரே 'ஆயுர்வேதத்தின் அசாஸ்த்ரீயத்துவத்தை பிரமாணங்களுடன் நிருபியுங்கள்' என்று வாதத்திற்கு அறை கூவி அழைப்பது போலிருக்கிறது இந்த உபந்யாஸம் என்பதை வாசகர்கள் காணலாம். பிரமாணங்களுடன் பிரதிவாதம் செய்பவர்களை சந்த்ரிகை வரவேற்கிறது. —ஆசிரியர்.]*

தற்சமயம் நமது தேசத்தில் இந்திய வைத்யத்தைப் பற்றி விவாதங்கள்— ஸாதகமாகவோ, எதிரிடையாகவோ பல நடத்தப் பட்டு வருகின்றன. ஆயுர்வேதத்தின் சத்துருக்களாக தங்களை பாவித்துக் கொண்டு, ஆயுர்வேதத்தில் கூறப் பட்டுள்ளவையெல்லாம் யுக்தி ஸஹமல்ல என்றும், சாஸ்திரஸித்தமல்லவென்றும் முன்னேறமுடியாத ஒரு வழி, (system) சில அனர்த்தகமான அர்த்த வாதங்கள் மித்யாவாதங்கள் மிகுந்ததென்றும் கூறுகிறார்கள். இதற்கு நேரிடையாக முன் கூறியவற்றையெல்லாம் காரணக்கூற்றுடன் எதிர்ப்பவர் மற்றொரு வகுப்பினர். இவ்விருவருக்கும் நடுவில் இருவர் கூறுவதையும் கவனித்துக் கொண்டு யார் ஜயிக்கப் போகிறார்கள் என பாரபக்ஷமில்லாமல் நீதிபதிகளைப் போன்றவர் சிலர். இந்த மூன்றாவது வகுப்பினருக்குத் தான் "ஆயுர்வேதத்தைப் பற்றி ஏற்படும் பழிச்சொற்கள் உண்மையல்ல; பொறாமை அல்லது அது போன்ற சில துர்குணங்களால் சத்ரு பாவத்தைத் தானாகவே தன்னிடம் ஏற்றுக் கொண்டு கூறப்படும் நீதியற்ற பிதற்றல்" என்பது நிரூபிக்கப் படவேண்டும். முதல் வகுப்பினருக்கு எவ்வளவு உண்மையை சுலபமாக அறிவித்தபோதிலும் ஏற்கெனவே தன்னிடம் ஏற்பட்டிருக்கும் சில குணங்கள் அவைகளை செவியிலேறவிடாதே!

அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்கள் அனேகம். அவைகளில் ஒன்று ஆயுர்வேதம் யுக்தியுக்தமா? சாஸ்த்ரீயமான ஸித்தாந்தமா? அல்லது யுக்திகளும் சாஸ்த்ரக் கட்டுப்பாடும் லக்ஷ்யமுமில்லாமலுள்ள 'சாஸ்திர' சப்தத்திற்கு உரிமையற்ற ஓர் வாதமா?

யுக்தியுக்தம், சாஸ்த்ர ஸித்தமென்றால் என்ன? பிரத்யக்ஷாதி ப்ரமாணங்களால் ஸாதிக்கத் தகுந்ததான ஓர் தத்வம். முட்டாள்தனமாக– ஒருவித சாஸ்த்ர வரம்பிற்கும் கட்டுப் படாமல் இருக்கக் கூடாது. ஏன்; இதுதானே? அவ்விதமானால் ஆயுர்வேதம் இந்த லக்ஷணத்திற்குக் கட்டுப்படுகின்றதா? அதாவது ஆயுர்வேதத்திலுள்ள தத்வங்கள் ஒற்றுமையாயும் முன்னுக்குப்பின் முரண்பாடற்றும் பிரமாணங்களுடனும் புத்திலக்ஷ்யமாயும் நியாயமாயுமுள்ளதாக இருக்கிறதா? இதுதானே தெரிந்துகொள்ள வேண்டியது.

இதை கவனிப்போம். ஆயுர்வேத சாஸ்த்ரம் முழுவதும் சரீரக் கிரியைகளுக்கு முக்கிய பீஜமான த்ரிதோஷங்களை அடிப்படையாக உள்ளது. இந்த தத்வத்தில் தான் ஆயுர்வேதம் முழுவதும் உழலுகின்றது. (ஏன்? இந்த தத்துவம் அறியாததால் தான் இதர வைத்யர்களின் மூளையும் சுழலுகிறது.) ஆம்; அந்த அடிப்படைத் தத்வங்களின் அறியாமைதான், நமது ப்ராசீனமான புத்திபலம், சாஸ்த்ர பரிசயம் பிராசீனர்களுக்கு இருந்ததுபோல நமக்கில்லாததுதான் பெருங்கெடுதி விளைவிக்கின்றது. பௌத்தர்களின் க்ஷணிக விக்ஞானம் போல் க்ஷணிகமான தீர்க்க தரிசனமல்லாத ஞான பலத்துடனிருக்கும் இக்காலத்தியருக்கு தீர்க்க தரிசனமுள்ள முனிவர்களால் அறிந்து ஆராயப் பட்ட தத்வங்கள் சரிவர அறிய இயலவில்லை. சிறிது மேதாவிகளென பிரஸித்தி அடைபவர்கள் தத்வங்களைத் தன் தன்னிஷ்டப்படி அர்த்தம் செய்யச் செய்ய, கேவலம் அனுஸரணத்திற்கு மாத்திரம் சக்தியுள்ளவர்கள் எவ்வழியில் போவது? எவ்வழி நல் வழி? என அறியாமல் திண்டாடுவதுடன் நம்பிக்கையிழக்கவும் காரணமாகின்றது

த்ரிதோஷ தத்வங்கள் பிரத்யக்ஷாதி பிரமாணங்களால் கண்டு பிடிக்கக் கூடியவைகளே. இது பிரமாணமல்லாத யுக்தியோ, அதிசயோக்தியோ அல்ல. அவை அன்றும்—இன்றும்— என்றும் அழியாப் பெருமையுடன் தேவைக்கு பூர்ணமாய் தனது சாஸ்த்ரீயத் தன்மையால் உதவி யளிக்கின்றது. பிரத்யக்ஷத்தைத் தவிர மற்ற ஊஹம் அனுமானம் யுக்தி முதலியவைகளின் உண்மையைக் கண்டுபிடிப்பது— கூறப்படும் தத்வங்களின் ஸித்தி (results) யிலிருந்துதான்.

அனுமானமென்பதும் ஓர் பிரமாணம். அது பிரத்யக்ஷத்தால் அறியமுடியாதவைகளை அறிவதற்கு உபயோகப் படுத்தப் படும் பிரமாணம். பிரத்யக்ஷத்தால் அறிய முடியாதவைகளை அறிவதற்கும் அந்த வஸ்துவின் உண்மை ஞானம் ஏற்படுவதற்கும் உபகரணம்.

ஆனல், அனுமானத்தால் கண்டுபிடிக்கப் பட்ட ஸித்திக்கும், யுக்தியால் கார்ய காரணபாவங்களை ஊஹித்துக் கண்டு பிடிக்கப் பட்ட ஸித்திக்கும் பிரத்யக்ஷத்தால் வந்த ஸித்திக்கும் வித்யாஸமிருந்தால் அப்பொழுது ஏதாவதொன்று உண்மையல்ல. உண்மையைக் கண்டு பிடிக்க வேண்டும். நம்முடைய விசாரத்தின் பலன் இரண்டிலும் ஒற்றுமையாக இருந்தால்தான் உண்மை அது. இந்த விசாரம் உண்மையாக விருந்தால் இந்தியாவிற்கு மட்டுமல்ல; அகில உலகத்திற்கும் இதுஒன்றே போதியதான இன்றியமையாத தத்வமாகும்.

கணிதம், வேதாந்தம், தத்வ சாஸ்த்ரம் எல்லாவற்றிலும் தத்வங்கள் மேல் நாட்டிலும் கீழ் நாட்டிலும் ஒரே விதமாகத் தான் ஒப்புக் கொள்ளப் படுகின்றது. இவை ஒரு தேசத்திற்கோ, ஓர் வகுப்பிற்கோ மாத்திரம் உரிமை எனக் கூற முடியாது.

இவ்விதமுள்ள எல்லா தத்வ சாஸ்த்ரங்களிலும் பிரத்யக்ஷம் அனுமானம் முதலிய பிரமாணங்களைக் கொண்டே அந்தந்த சாஸ்த்ரங்கள் கூறுபவை உண்மையான தத்வங்

களே என்பதை நிரூபிக்கவேண்டும். பிரத்தியக்ஷத்தில் மாத்திரம் எல்லாவற்றையும் நிரூபிக்கவேண்டுமென்பது பொருத்தமல்ல.

ஏன்? ஜீவாணுவாத (Bactriology) த்தை எடுத்துக்கொள்வோமே. இது தற்சமயம் எல்லா நாளைய விக்ஞானிகளாலும் சாஸ்த்ரீயமானது என நிர்த்தாரணம் செய்யப்பட்டுள்ளது. சரீரத்தில் சில விகிருதாவஸ்தைகளில் (morbid conditions) ஏற்படும் விகாராதிசயங்களுக்கு காரணமாக இவைகள் கருதப் படுகின்றன. ஆம். இவ்வளவு தூரதிருஷ்டிக் கருவிகளும் அணுதர்சினிக் கருவிகளுமிருந்தும் சிற்சில அணுக்கிருமிகளின் ஸ்வரூபம் எவ்விதக்கருவி பலமிருந்தும் கண்ணுக்குப் புலப்படா நிலைமையிலிருக்கின்றனவே? அப்பொழுது இவைகளை எவ்விதம் காரணம் என நிரூபிக்கிறோம். அனுமானம் யுக்தி இவைகளாலல்லவா?

இவ்விதம் கண்ணுக்கும் கருவிக்கும் புலப்படாத அணுக்கிருமிதான் ஒரு வியாதிக்குக் காரணமென வைத்துக்கொள்வோம். ஆனால் அவை எவ்விதம் வியாதியை உற்பத்தி செய்கிறது? இந்த கிருமிகள் சரீரத்திலுள்ள கருவிகளை விகாரமடையச் செய்து, வியாதியை உண்டாக்குகின்றது எனக் கூறலாம். இந்த கிருமிகள் எப்பொழுது எவ்விதம் சரீரத்தை இவ்விதம் தூஷிக்க இயல்புடையனவாக ஆகின்றது? இவ்விதமாயுள்ள கிருமி இந்த வியாதியைத் தான் உண்டு பண்ணும் என்பது எவ்விதம்? இக்கேள்விகளுக்கு தகுந்த பதில் கிடைப்பதரிது. நாம் இந்த இந்த கிருமிகள் இந்த இந்த வியாதிகளை உண்டு பண்ணும் இவ்வித சக்தியை யுடையது என்பதைக் கார்ய காரணங்களை அநுஸரித்து நிர்ணயிக்கிறோம். இது அனுமானத்தாலோ யுக்தியாலோ அல்லவா?

இவ் வழியிலேயே நமது பிராசீனர்களும் த்ரிதோஷங்களை ஆரோக்ய—வியாதி மூலமாக கண்டு பிடித்திருக்கிறார்கள். இவை யாவை? ஆராய்வோம்.

பல காலத்திய ஆராய்ச்சிகளாலும், அநுபவத்தாலும் யோக த்ருஷ்டியாலும், விசாரத்தாலும், சரீரத்தில் ஏற்படும் சிற்சில மாறுபட்ட சின்னங்கள், எக்காரணத்தைக் கொண்டு மாறுபடாமலும் தவறுதலில்லாமலும் சிற்சில அவஸ்தைகளில் ஏற்படுகின்றன. இதைச் சிறிது விசாரிக்கும் மனப் பான்மையுடன் ஆராய்வோம். மேற்கூறிய விகார சின்னங்கள், மேலெழுந்த வாரியாக நாம் விசாரித்தால் பல வேறு தலையங்கங்களில் பிரிக்கலாம். இவ்விவேசனம் இன்னமும் சற்று ஊக்கத்துடன் நடத்தினால், இவ் விசேஷத் தலையங்கங்களில் பிரிப்பதைவிட, ஸாமான்யமாக சுருக்கமாக எங்கும் ஒற்றுமையுள்ள தலையங்கங்களில் பிரிப்பது தான் உசிதம் எனத் தானே தெரிய வரும். அவ்வித விவேசனத்தால் கிட்டிய ஸித்திமானுடைய உண்மையை பிரத்யக்ஷ அநுமானாதி ப்ரமாணங்களைக்கொண்டு அறிந்து கொள்ள வேண்டும்.

அவ்விதம் விவேசனம் செய்தே நம் சாஸ்திரத்தில் எல்லாவிதமான லக்ஷணங்களையும் மூன்றே தலையங்கங்களில் அடக்கியுள்ளது. அவை தான் வாதம், பித்தம், கபம் என்பவை. ஆனால் நமக்கு இப்பெயர்களில் சண்டையில்லை. ஊஹிப்பவர்களின் சக்திக்கு உகந்தாற்போல் பெயரையும் தேவையானால் மாற்றிக் கொள்ளட்டுமே? நமக்கு இந்த திரிதோஷங்களின் சக்தியிலும் ஸித்தியிலும் தான் நோக்கம். ஆயுர்வேத சாஸ்த்ரம் வாதம் பித்தம் கபம்— என அவைகளைக் கூறுகின்றது. நாளைய வைத்யம் இவைகளை வேறு விதமாகக் கூறலாம். பெயர் வைப்பது என்பது வியவஹாரத்தில் ஸௌகர்யம் ஏற்படத் தானே? ஆக ஆயுர்வேதம் தன்னுடைய வழியில் பரிசீலனை முறையை ஆதரித்தது. அதற்குத் தகுந்தாற் போல் எல்லா சாரீர மானஸ விகிருதி ப்ரக்ருதிகளையும் இத் திரிதோஷங்களின் செயலாக சுருக்கி விட்டது. இந்த வழி ஒழுங்காக இருந்தால், நியாயத்திற்குக் கட்டுப் பட்டால் இதை உலகுக்கே ஒரு தத்துவமாக ஒத்துக் கொள்வதில் என்ன ஆக்ஷேபணை?

நமது அநுபவத்திலும், நாம் ஸித்தியிலிருந்து திரி

தோஷதத்வத்தின் உண்மையை அறிகிறோம். ஸுச்ருதர் கூறுவது போல் சாஸ்த்ரத்திலிருந்தும், ஸித்தியிலிருந்தும், பரிசீலித்ததிலிருந்தும் இந்த தத்வம் ஒழுங்கானது என நாம் கூறுகிறோம். ஒருவித அனுபவத்தால் ஏற்படும் விசேஷங்களை யெல்லாம் ஸாமான்யமான ஒரு தொகுதிக்குக் கொண்டுவந்து அவைகளை அனுபவத்திலும் ஒற்றுமைப் பட்டதாகக் காண்கிறோம். அந்த அனுபவ ஸித்தி தத்வத்திற்கு ஒத்தும் சாஸ்திர ஸம்மதமாகவுமிருக்கிறது.

ஆக முன் கூறிய திரிதோஷதத்வம் என்பது உண்மை, ஓர் பகல் கனவுக்காரரின் குருட்டு யோஜனையால் ஏற்பட்டதல்ல. இடைவிடா அனுபவ பரிசீலனையாலும், தீர்க்கமான ஆழ்ந்த சாஸ்த்ர பரிசயத்தினாலும், உயர்ந்த தத்வ தர்சனத்தாலும் ஸித்தியினாலும் கண்டுபிடிக்கப்பட்டவை.

ஆக ஆயுர்வேதம் சாஸ்த்ரீயமான தத்வங்களை உடையதல்ல; யுத்தியுக்தமல்ல எனக் கூறுவது சோம்பேறித்தனத்தாலும் முட்டாள்தனத்தாலுமே யன்றி வேறல்ல. ஆம்; அதன் தத்வங்கள் ஆழ்ந்த— ஸுலபமாக அறியக் கூடாத முறையில் தானிருக்கின்றன. அதன் பாரதர்சனமடைய கூர்மையான மேதையும் அதிக பரிசீலன சக்தியுமுள்ள ஓர் அதிமேதாவியால் தான் முடியும். அதற்காக இதை சாஸ்திர யுக்தி ஸஹமல்ல எனக் கூறுவது எங்ஙனம்?

ஆம்; கிழக்கிற்கும் மேற்கிற்கும் ஒரே ஒரு வித்யாஸமுண்டு. நமது சாஸ்த்ரங்கள் எல்லாம் உலகிலுள்ள பல விசேஷங்களை யெல்லாம் அறிந்து அனவரதபரிசீலனையால் அவைகளின் மூல தத்வங்களைக் கண்டறிந்து, அதற்குப் பிறகு மேற்கண்ட மூல தத்வங்களுக்கும் உலகிலுள்ள சராசரங்களுக்குமிடையே உள்ள நித்ய ஸம்பந்தத்தையும் கார்ய காரண பாவத்தையும் அறிவதிலே முக்யக் கருத்துக் கொண்டவை. நவீன விக்ஞானம் இதற்கு முற்றிலும் வேறுபட்டது. விக்ஞானம் வளர்ந்து கொண்டே இருக்கக் கூடியது என அவர்கள் எண்ணுகிறார்கள். ஏன்? நாமும் அவ்விதம் தான் கருதுகிறோம். ஆனால் வளர்ச்சிக்கு

ஆதாரம் அவ்வப்பொழுது மூல தத்வங்கள் மாறிக் கொண்டேயிருப்பதுதான் என்கிறார்கள் அவர்கள். வளர்ச்சிக்கு அடையாளம் மூல தத்வத்திற்கு மேலும் விவரணமும் பிரகாசமும் ஏற்படுவதுதான் என்பது நமது நோக்கம்.

ஓர் சாஸ்த்ரம் சாஸ்த்ரீயத் தன்மை யுடனிருக்கிறதா என்பதை பரிசீலனை செய்ய வேண்டுமானால் சில முக்ய விஷயங்கள் கவனிக்கப் பட வேண்டும். ஒவ்வொரு சாஸ்திரமும் தனக்கு ஒரு வரம்பை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. ஓர் வழியைக் கடைப்பிடிக்கின்றன. தனது அனுபவ ஸித்திகளை யெல்லாம் தான் கடைப்பிடித்த மூல தத்வங்களுடன் ஒத்து வருகிறதா என பரிசீலனை செய்கின்றன. மூல தத்வங்களுடன் ஒத்து வராதவையாக இருந்தால் பரிசீலனை மார்க்கத்திலோ பரிசீலனை விஷயத்திலோ தான் தவறு இருக்க வேண்டும். இவ்விதம் பரிசீலனை செய்ய சில வழிகளைக் கடைப்பிடிக்கின்றன. இவைகளை அறிய அணுகாமலோ, அனுபவத்திற்குக் கொண்டு வர முயற்சிக்காமலோ, சாஸ்த்ரீயத்தன்மையைப் பற்றி விசாரிக்க இவர்களுக்கு ஒருவித அதிகாரமுமில்லை. ஆயுர்வேதத்தைப் பற்றி அறிய வேண்டுமானால், ஆயுர்வேதத்தை ஸாங்கோபாங்கமாகப் படிக்கட்டும். அதற்கு பஞ்ச பூத ஸித்தாந்தங்களை அறிய ஸாங்க்ய யோக ந்யாயாதி சாஸ்த்ரங்களைப் படித்து நமது பூததத்துவ சாஸ்த்ரங்களை அவகாஹப் படுத்திக் கொள்ளட்டும். பிறகு சொல்லுங்கள் ஆயுர்வேதம் எப்படி என்று. அப்படி சாஸ்த்ரீயதை அதனிடமில்லையென்றால் காரணங்களுடன் நிரூபியுங்கள். பார்ப்போம்!

ஸ்ரீ தந்வந்தரயே நம:

# பாண்டு ரோகம்

[வைத்ய விசாரத—எஸ். வி. ராதாகிருஷ்ண சாஸ்த்ரி]

[1945 நவம்பரில் மதுரையில் நடந்த 13-வது ஆயுர்வேத ஸம்மேளனத்தின் கட்டுரைப் போட்டியில் ஸர்வோத்தமமென்று தங்கப் பதக்கப் பரிசு பெற்றுள்ள இந்த பாண்டுரோகக் கட்டுரை, ஸம்ஸ்க்ருத பாஷையிலிருந்து கட்டுரையாளராலேயே மொழி பெயர்க்கப் பட்டுள்ளது. பரிசு பெற்ற ஸம்ஸ்க்ருத நிபந்தத்தைப் பார்க்கிலும் தமிழிலிருக்குமிதில் வியாக்கியானரூபமாக சில அம்சங்கள் அதிகமாகி சோபிக்கின்றன என்பது விசேஷம். —ஆசிரியர்.]

ஒவ்வொரு வியாதியும் சரீரத்தை ஒவ்வொரு விதத்தில் உபத்ரவப் படுத்துகின்றது. வியாதிகளின் பெயரும் அவை செய்யும் சரீர தூஷணத்தை யொட்டியோ, தூஷிக்கப்படும் ஆசயம் அங்கங்கள் இவைகளை யொட்டியோ ஏற்படுகின்றன. பாண்டுவென்ற பெயர் இந்த ரோகியின் சரீரத்தின் நிறம் தன் சுய நிறத்தைக் காட்டிலும் மாறுபட்டு வெளுத்து விடுகிறதென்பதால் ஏற்பட்டிருக்கிறது. 'பாண்டு' என்ற நிறம் சிறிது மஞ்சள் கலந்த வெளுப்பு. தாழம்பூ போன்றதும் விடியற்கால சந்த்ரன் போன்றதுமானது. ரோகியைப் பார்த்தவுடன் தோன்றும் தோல் முதலியவைகளின் நிற மாறுபாட்டை உத்தேசித்துப் பாண்டு என்ற பெயர் ஏற்பட்டாலும், சரீரத்தினுள் ஏற்பட்டிருக்கும் தாதுக்ஷயம் முதலியவை போன்ற பிரதானமான சில விகிருதிகளும் உள்ளன. மற்றும் பாண்டு வர்ணத்திலும், வாதஜ பித்தஜ விபாகங்களில் சில இடத்திலும் விசேஷாவஸ்தைகளிலும், கருப்பு, சிகப்பு, பச்சை முதலிய நிற மாறுபாடுகளும் நிறக்கலப்பும் ஏற்பட்டாலும் ஸாமான்யமாக பாண்டு வர்ணமே காணப் படுகின்றதென்றே பாண்டு ரோகம் எனக் கூறப்படுகிறது.

எல்லா வித ரோகங்களைப் போலிதையும் ஸ்வதந்த்ரம் பரதந்த்ரம் என இரண்டு விதமாகப் பிரிக்கலாம்.

## ஸ்வதந்த்ர பாண்டு ரோகம்.

ஸம்ப்ராப்தி :— இவ் வியாதி எவ்விதம் வருகிறதென்பதை ஆராய்வோம். சரகாதி ஆசார்யர்களின் ஸங்க்ரஹம் இவ்வாறு :—

தோஷங்கள் கோபித்து ஸௌம்யமான ஓஜஸ் க்ஷீணமடைந்து, வாயு அதிகமாகி, அதனுல் ஹ்ருதயத்திலிருக்கும் பித்தம் சரீரம் முழுவதும் பரவச் செய்யப் பட்டு, தாதுக்களின் நடுவில் தங்கி, கபம், ரக்தம், மாம்ஸம் இவைகளைக் கெடுக்கின்றது. அதனுல் தோல் மாம்ஸம் இவைகளில் பாண்டு, மஞ்சள், பச்சை நிறங்கள் தோன்றுகின்றன. ஓஜஸ் குன்றியதும், ஸத்வம் குறைந்த தாதுக்கள் ஓய்ந்து போகின்றன. (வெலவெலத்து விடுகின்றன). தாதுக்கள் குறைந்ததும் நிறம், பலம், சரீரத்திலுள்ள ஸ்நேஹம் எல்லாம் குன்றுகின்றன. ரக்த போஷகமான ரஸபாகம் பித்தத்தால் குன்றியவுடன், ரக்த வர்த்தக ஸாரபாகங்கள் உண்டாகாததாலும் ரக்தம் குன்றுகிறது. நிறத்தைப் பாதுகாக்கும் பித்தம் தூஷிக்கப் படுவதால் சரீர நிறம் பளபளப்பு இவை மாறுபடுகின்றன. ஸ்னேஹாம்சம் குறைவதால் மேதஸ் குறைந்து இந்த்ரியங்கள் வெலவெலத்துப் போகின்றன. இது தான் வ்யாதியின் ஸம்ப்ராப்தி. ஆக ப்ரதானமாக இவ்வியாதியில் ரக்தம் க்ரமமாகக் குறைந்து விக்ருதியுமடைந்து த்வக்கிலும் விக்ருதி ஏற்படுகிறது.

### தூஷ்யங்களும், தோஷங்களும்.

ஓஜஸ், ரஸம், ரக்தம், த்வக், மூத்ரம், மலம், பித்தம், கபம் இவை தூஷ்யம். வாயுதான் இவ்வியாதியில் ப்ரதானமான தோஷம். பித்தம், கபம் இவை அநுபந்தம்.

### ஓஜஸ் க்ஷயம். (ओज: क्षय:)

இவ்வியாதியில் ஓஜஸ் குன்றி ரஸம், ரக்தம், மாம்ஸம், மேதஸ் இவைகளில் விக்ருதி ஏற்படுத்தி, சாகை (शाखा) என்ற ரோக மார்க்கத்தில் வியாதி ஏற்படுகின்றது. ஓஜஸ்

என்பது என்ன? அது எவ்விதம் குறைகின்றதென்று பார்ப்போம்.

பிராசீனர்கள் ஓஜஸ்ஸைப் பற்றிக் கூறியிருப்பது கீழ்க் கண்டவாறு:— ரஸம் முதல் சுக்ரம் முடிய ஏழு தாதுக்களின் உயர்ந்த ஸாரம். ஒவ்வொரு தாதுவிற்கும் தனித்தனியாக இருப்பது (**प्रतिधातु पृथग्विधम्**) ஹ்ருதயத்திலிருப்பது வெளுத்தும் சிறிது சிகப்பு மஞ்சள் நிறம் கலந்தும் தேன் போன்றும் நெய்யைப் போல் ஸர்வஸாரமாகவும் இருக்கும். அது குன்றினுல் உடல் குன்றும். அதிகமானுல் உடல் வளரும். உடலில் எட்டு சொட்டளவும், அரை அஞ்சலி பிரமாணமுமிருக்கும். பூவில் மகரந்தம் போலவும் பாலில் நெய்த் தெளிவு போலவும் ஸர்வ ஸாரமாக இருந்து கொண்டு உடலின் வலிவு, அழகு, தேஜஸ் இவைகளை உத்பத்தி செய்யும். சீதம், ஸ்நிக்தம், ஸரம், ம்ருது, ம்ருத்ஸ்னம் (**मृत्स्नम्**) ஆக இருக்கும்.

ஆசார்யோக்திகளில் மற்ற அம்சங்களில் ஒற்றுமை தோன்றிய போதிலும், ஏழு தாதுக்களுக்கும் தனித்தனியாக இருக்கும் ஓஜஸ்ஸிற்கு சமமாக நிறம், ஸ்நிக்தம் முதலிய வீர்யங்கள்— முதலானவை கூறப்படுவது யுக்தமாகத் தோன்ருது. எல்லா தாதுக்களின் ஓஜஸ்ஸும் எவ்விதம் ஒரே மாதிரி இருக்க முடியும்? ரக்தத்தின் ஓஜஸ் உஷ்ணமாகவும் அஸ்தியை உத்பத்தி செய்யும் ஸாரம் ரூக்ஷமாகவும் இருப்பதுதான் ந்யாயமல்லவா? அவ்விதமே அவ்வவைகளின் வர்ண வேற்றுமையும் ஏற்படக்கூடியதல்லவா?

சிறிது ஆராய்வோம். ரஸம் முதலிய தாதுக்கள் தன் முன்னுள்ள தாதுவை ஆகாரமாக்கிக் கொண்டு தான் வளர்ந்தும், தனக்குப் பிற்பாடுள்ள தாதுவிற்குத் தான் ஆகாரமாகி அதை வளர்த்தும் சரீரத்தை வளர்க்கின்றது என்பது சாஸ்த்ர ஸித்தாந்தம். ரஸம் ரக்தத்திற்கு ஆகாரம்; ரக்தம் மாம்ஸத்தைப் போஷிக்கின்றது. அஸ்தி மாம்ஸத்தினுல் போஷிக்கப் படுகின்றது. தாது பாகம் ஏற்படும்பொழுது பக்வமான தாதுவின் ஸாராம்சம் அடுத்த தாதுவின்

போஷ்யாம்சமாகி, தானும் அத்துடன் இரண்டறக்கலந்து தானுமதுவாகி அதை வளர்ப்பதும், கிட்டாம்சம் மலமாக சரீரத்தைக் கெடுக்குமென சரீரத்திலிருந்து வெளிப்படுத்தப் படுவதும் சரீரத்தின் இயற்கை. இவ்விதம் ஒவ்வொரு தாதுவும் தன்னளவை மீருமல் தாத்வக்னிகளால் பாதுகாக்கப் படுகின்றன. இவ்விதம் தாதுபாக க்ரமத்தில் ஏற்படும் தாதுக்களின் ஸாரம் தனக்கடுத்த தாதுவைப்போஷிக்கவும், அதுவாக தான் மாறவும் தகுதியுள்ளது தான் 'ஓஜஸ்' எனக் கூறப் படுகின்றது.

இந்த ஓஜஸ் ஒவ்வொரு தாதுவிற்கும் தனித் தனியாக இருக்கிறது. அவ்விதம் அதன் ஸ்தானமும் மாறுபட்டது. வர்ண வேற்றுமையும் ஸஹஜமே. ஆனல் அந்த எல்லா தாது ஸாரங்களும் ரஸம் என்ற திரவ பதார்த்தத்தால் அவ்வவை அடைய வேண்டிய இடத்திற்கு எடுத்துச் செல்லப் படுகின்றன. ரஸத்திற்கு ஹ்ருதயம் ஸ்தானமென்ற காரணத்தால் இடங்கள் மாறுபட்டிருந்தும் ஓஜஸ்ஸிற்கும் ஹ்ருதயந்தான் இடமாகக் கூறப் படுகின்றது. ஸர்வதாது ஸாரமான சுக்ரத்தின் ஸாரமான ஓஜஸ்தான் எட்டு பிந்துவிள்ளது பரம் ஓஜஸ். (परमौजः) மற்றவை அரை அஞ்சலியளவுள்ளது. (अर्धाञ्जलिपरिमितम्)

இவ்விதம் ஒரு தாதுவிலிருந்து மற்ளுெரு தாது பரிணமமாகும் பரம்பரை சில சமயம் சீர்கெட்டு விடுகின்றது. அதற்குக் காரணம்:— தாத்வக்னியின் சக்திக் குறைவு, ரஸத்தை சரீரம் முழுவதும் விக்ஷேபம் செய்து பரவச் செய்யும் வியான வாதத்தின் சீர்கேடு. தாதுவஹ ஸ்ரோதஸ்கள் அடைபடுதல், போஷ்யமான தாது ஆகந்துககாரணங்களால் க்ஷயமடைதல், அல்லது இம்மாதிரியான மற்றும் சில காரணத்தால், பரிணமம் சரிவர ஆகிறதில்லை. ஆக, தாதுஸாரங்களான ஓஜஸ்ஸூம் இவ்விதம் சீர்கெட்டுவிடுகின்றது. இந்த ஓஜஸ் குன்றுவதை ஸ்ரம்ஸம், வியாபத், க்ஷயம் என்று மூன்று விதமாகப் பிரித்திருக்கிருர்கள்.

பாண்டுவில் க்ஷீணமான ஓஜஸ் யாது? அது எவ்விதம்

குன்றுகின்றது? அதனால் வியாதி எவ்விதம் உத்பத்தியாகின்றது?

ஆஹாரத்திலிருந்து ஸாரமென, கிரஹிக்கப் பட்ட ஆஹார ஸாரம், ரஸம்— சரீரத்தில் எல்லாவிடத்திலும் பரவி, அங்கங்கே தாத்வக்னிகளால் பாகமடைந்து தன்னுடைய பிரதான பக்வாசயமான யகிருத் ப்லீஹங்களையடைந்து, ரஞ்சகமென்னும் பித்தத்தால் வர்ணமேற்றப் பட்டு, அதன் ஸாரமான ரஸத்தின் ஓஜஸ் ரக்தம் என்ற பெயருடன் தாதுவாக மாறுகின்றது. அதன் மலாம்சம் கபமாக மாறி அங்கங்கே கபக்ரியைகளைச் செய்து கொண்டு, மலமானவுடன் (சரீரத்திற்கு உபயோகமாகாததாக ஆனவுடன்) புப்புஸங்களிலிருந்து வெளியேற்றப் படுகின்றது. இவ்விதம் தாதுபாகம் ஸரிவர ஏற்பட்டு ரஞ்சனம் நடந்து வந்தால், சரீரத்தில் நிறத் தெளிவு, ரக்தம் நிரம்பி நல்ல வலிவு வளர்ச்சியுடன் இருக்கும். இந்த ஓஜஸ் குன்றினுலோ, விகிருதி அடைந்தாலோ, நிறம் மாறுபட்டு, ரக்தம் குறைந்து வலிவு குன்றி இந்த்ரியங்கள் வெலவெலத்து மனிதன் சிரமப் படுகிறுன். ஆக இவ் வியாதி ரஸத்தின் ஓஜஸ் க்ஷயத்தால் ஏற்படுவதனுல் தான் சரகர் இதை ரஸ துஷ்டியால் ஏற்பட்ட வியாதி எனக் கூறுகின்றுர்.

अश्रद्धा चारुचिश्चास्य वैरस्यमरसज्ञता ।
हृल्लासो गौरवं तन्द्रा साङ्गमर्दो ज्वरस्तमः ॥
पाण्डुत्वं स्रोतसां रोदः क्लैब्यं सादः कृशाङ्गता ।
नाशोऽग्नेरयथाकालं वलयः पलितानि च ।
रसप्रदोपजा रोगाः—என்று.

பாண்டுவிலும் மேற் கூறிய குறிகளனைத்தும் தான் காணப் படுகின்றனவே.

ரஸம்.

ரஸத்தின் ஓஜஸ் வியாதியில் தூஷிக்கப் படுவது போல், ரஸமும் தூஷிக்கப்படுகின்றது.

ஆஹாரத்திலிருந்து ஸாரம் ஸரிவர ஏற்படுவதில்லை. அதற்குக் காரணங்கள் :—

(1) சரீர போஷகமான ஆஹாரங்கள் ஸரிவரக்கிடைப்பதில்லை. தாரித்ரியம் முதலிய காரணங்களினாலும் இது ஏற்படலாம். அல்லது ஆமாசயம் முதலிய இடங்களில் விரணம் முதலியவை ஏற்பட்டு, ஆஹாரம் ஸரிவர சாப்பிட முடிவதில்லை. அஜீர்ணம் முதலியவைகளால் ஆஹாரத்தில் ப்ரீதி ஏற்படுவதில்லை. இதனால் ஆஹாரமே சரீரத்திற்கு தேவையுள்ளது கிடைக்காததால், ஆஹார ஸாரம் குறைந்து, ரஸம் குறைந்து, ரக்தம் குறைந்து வியாதி உண்டாகின்றது.

(2) சாப்பிட்ட ஆகாரம் ஜீர்ணமாவதில்லை. அவனவன் தேஹாக்நி பலத்திற்குத் தக்கவாறில்லாமல், குருவான ஆகாரத்தையோ, (द्रव्यं गुरु) அல்லது லகுவான ஆகாரத்தை அளவிற்கு மிஞ்சியோ (मात्रया गुरु) அருந்தினால், ஸ்வபாவமாக அவிக்ருதமான அக்நியாயிருந்தாலும் இதை ஜீர்ணிக்க முடியாமல் போகின்றது. ஆக ஆகார தோஷத்தாலோ, அளவு மாறுபாட்டாலோ தன் சக்திக்கு மீறிவிட்டதால், ஸரிவர பாகமாகாமலே பக்வமான ஸாரத்துடன் அபக்வமான ஸாரமும் சேர்ந்து சரீரத்தில் ஸஞ்சரிக்கின்றது. அதனால் ஸ்ரோதோ விபந்தம் முதலியவைகள் ஏற்படுகின்றன. இதனால் உத்தரோத்தர தாது பாகம் ஏற்படுவதில்லை.

(3) பக்வமான ஆகார சாரம் தன் தன் போஷ்யதாது விடத்திற்கு அழைத்துச் செல்லப் படுவதில்லை. ஆஹார ஸாரம், ரஸத்தைப் போஷிப்பதோ, ரஸ ஸாரம் ரக்தத்தைப் போஷிப்பதோ, அதனதன் போஷ்ய தாதுவுடன் தான் சேர்ந்தால்தானுண்டு. இவ்விதச்சேர்க்கைகளுக்குத் தான் நடுநடுவே தமன்யாதிகளுக்கு ஆங்காங்கு க்ரஹித்த ஸாரங்களை எடுத்துச் செல்ல, ஸ்ரோதஸ் என்ற மார்க்கங்களிருக்கின்றன. இந்த ஸ்ரோதஸ்கள் தடைபடாமலிருந்தால்தான் போஷ்ய தாதுவிற்குப் போஷணம் ஏற்படும்; போஷக தாதுவிற்குப் போஷணம் செய்ய முடியும். இந்த

ஸ்ரோதஸ்களும் ஒவ்வொரு தாதுவிற்கும் தனித் தனியாக இருக்கின்றன. இவைகளின் கசியும் தன்மை அடைந்த முகங்கள் (स्रवणात्मकानि मुखानि) அடைபடாமலிருக்க வேண்டும்.

ஒருவன் மண்ணைத் தின்னும் பழக்கம் கொண்டிருக்கிறான். மண் கோஷ்ட- மார்க்கங்களிலிருக்கும் ஸாரக்ராஹிகளான ஸ்ரோதஸின் முகங்களை அடைக்கின்றது, பூசிக் கொள்ளுகின்றது. ஸாரம் சரிவர எடுபடுவதில்லை. வியான வாதத்தின் விக்ஷேப சக்தி குன்றுகின்றது. ஆஹாரசாரம் ரஸமாக மாறுவதில்லை. சாப்பிடும் ஆஹாரம் வரளுகின்றது. (निरूक्ष्यते)

(4) ஆஹாரத்திலிருந்து துஷ்டமான ஆஹார சாரம் உத்பத்தியாகுதல். பித்த ப்ரக்ருதியான சரீரத்தில், பித்தளமான– விதாஹியான ஆகாரங்கள் சாப்பிட்டு, ஆகாரம் (विदग्धाजीर्णम्) ஜீர்ணித்த ரஸமும் விதக்தமாகி ரஸம் கெட்டு விடுகின்றது. இந்த இடத்தில் தீபனமான சக்தி ஒழுங்காக இருந்தும் பாசன சக்தி– விதக்தமாக— துஷ்டமாகிவிட்டதால் பக்வமான ரஸமும் துஷ்டமாகி விடுகின்றது.

(5) கடுமையான வியாதியிலிருந்து மீண்டவனுக்கு, மீண்டவன் அபத்தியம் செய்ததால் மறுபடியும் வியாதி ஏற்பட்டால் தாது பாகம் அதிகம் ஏற்படுகின்றது. தீவ்ரமான ஜ்வரம் முதலியவைகளிலிருந்து விடுபட்டவனின் சரீரம் மிகவும் க்லேசமடைந்திருக்குமாதலாலும் அக்நி பலம் குன்றியிருப்பதாலும் அபத்யமான குருவான ஆஹாரம் முதலியவைகள் சரிவர ஜீர்ணிக்கப் படாமல் ஓஜஸ் உண்டாகுவதில்லை.

(தொடரும்.)



ஸ்ரீ தந்வந்தரயே நம:

# ஸ்ரீதந்வந்தரி ஜயந்தி

ஆசிரியர்,

ஆரோக்கியத்திற்கு அ(தி)திதேவதை ஸ்ரீ தந்வந்தரிபகவான் ஆரோக்கிய வாழ்வை விரும்பும் அனைவரும் ஸ்ரீ தந்வந்தரிபஜனம் செய்ய வேண்டும். தென் இந்தியாவில் ஸ்ரீரங்க க்ஷேத்ரத்திலும், வட இந்தியாவில் காசி க்ஷேத்ரத்திலும் ஸ்ரீ தந்வந்தரி கோயில்கள் பிரஸித்தமானவை. ஆசுவயுஜ கிருஷ்ண திரயோதசி திதி இவ்வாண்டு ஐப்பசி 6வ. மங்கள வாரம் தந்வந்தரிபகவான் புவியில் அவதாரம் செய்துள்ள சுபதினம், உலகத்தின் ஆரோக்யத்திற்காக உழைக்கும் வைத்யர்கள் ஸ்ரீ தந்வந்தரி பூஜையை மிக விசேஷமாய் அநுஷ்டிக்க வேண்டும். வைத்யர்கள் தன் க்ருஹங்களிலோ, ஆலயங்களிலோ தனிமையாகவும் பொதுவாகவும் ஸ்ரீ தந்வந்தரி பகவானுக்கு ஷோடசோபசார பூஜை செய்வதுடன், ஆயுர்வேத சேவையில் நித்யம் ஈடுபட்டுழைப்பது ஆயுர்வேதஸ்வரூபியான தந்வந்தரி பகவானுடைய ப்ரஸாதத்தை அடைய சிறந்த ஸாதனமாகும்.

## ஆரோக்கிய சந்த்ரிகா.

ஸ்ரீ தந்வந்தரி கிருபையால் வைத்ய சந்த்ரிகையில் ஆரோக்கிய சந்த்ரிகா அநுபந்தம் இந்த மாதத்திய சஞ்சிகையுடன் சேர்த்துப் பிரகாசம் செய்யும் சௌகர்யம் ஏற்பட்டது. இந்தியாவில் தேச பாஷைகளிலும், இங்கிலீஷ் பாஷையிலும் பொது ஜனங்களுக்கு ஆரோக்கியத்தைப் போதிக்கும் பத்திரிகைகள் பல இருக்கின்றன. இவை யாவும் ஆங்கில வைத்ய ஸம்பிரதாயத்தை அப்படியே தழுவி, வெளிநாட்டு ஆகாரம்—ஆசாரமே சிலாக்கியமென பதியும்படிக்குப் புகட்டுபவைகளாகவே இருக்கின்றன. ஆயுர்வேதத்தை அநுசரித்தோ, நம்மிந்தியரின் சொந்தமான ஆகார—ஆசாரங்களையும், இக-பரம் இரண்டுக்கும் பரம சிரேயஸ்கரமான தர்ம சாஸ்த்ரங்களையும், அநுஷ்டானங்களையும், அதிலுள்ள நன்மை தீமைகளையும் கவனித்துப் பார்த்துப் பொது மக்கட்கு ஆரோக்கிய வழிகளை உரைக்கும் பத்திரிகை இன்று ஒன்றுமேயில்லை.

பொதுஜன ஆரோக்கியத்தைக் காப்பாற்றுவதிலும், வியாதிகளைப் பரவவொட்டாது தடுத்தலிலும் நமது தர்மசாஸ்த்ரோபதேசங்களும், ஆயுர்வேதோபதேசங்களும் இன்றைக்கும் இதர வெளிநாடு வைத்ய சாஸ்த்ரங்களைப் பார்க்கிலும் பல மடங்கு பல விதத்தில் ஒப்பற்ற—தாரதம்யக் கணக்கற்ற ரீதியில் உயர்ந்தது என்பது ஸித்தாந்தம். இதை அநுஷ்டானத்தில் கொண்டுவரும் வசதிகளைச் செய்ய வேண்டியது அரசரின் கடமை. இருக்கும் வஸ்து தத்துவங்களை ஆரோக்கிய சந்த்ரிகை வாயிலாக எடுத்துரைக்க நாமியன்றவரை பாடு படுவோம்,

## குறிப்புகள்.

நல்லதே.

*1946* அக்டோபர் 2-வது வாரத்தில் சென்னையில் நடந்த சென்னை மாகாண அலோபாதிக் மாணவர்களுடைய மகாநாட்டில் ஆரம்ப விழாவை நடத்தும் பாக்கியம் பெற்றுள்ள ஸந்தர்பத்தில் ஆந்திர அலோபாதிக் மெடிகல் காலேஜ் ப்ரின்ஸிபால் ஸ்ரீ டாக்டர் பாஸ்கர மேனேன் அவர்கள் லோகத்திலும் சாஸ்திரத்திலும் அவர் செய்துள்ள ஆராய்ச்சியினுல் கண்டு பிடித்துள்ள மகத்தான தத்துவங்களை வெளியாக்கி விட்டார். வைத்ய விஷயமான சீர்திருத்தங்கள் முன் நிற்கும் போது வைத்யம் பயிலும் மாணவர்களுடைய யோஜனைகளை வைத்ய சீர் திருத்த விஷயத்தில் எடுத்துக் கொள்ள வேண்டியது முக்கியம் என்பது மேனேன் அவர்களின் லோக ஆராய்ச்சியின் முதல் வெளியீடு. சாஸ்த்ர ஆராய்ச்சியின் வெளியீடு என்னவெனில், அலோபாதிக் மாணவர்கள் ஆயுர்வேதம் படிப்பது— வைத்ய சாஸ்த்ரத்தின் சரித்திரப் படிப்புக்கு ஒரு வகையில் மூலாதாரமாகலாமே தவிர வேறு எவ்வித பயனையும ளிக்காது என்பதே,

சென்னை மெடிகல் காலேஜின் பரிசு விழாவில் ஆரோக்கிய மந்த்ரி அம்மையார் 'அலோபாதிக் பயிற்சிக்குப் பின்பு ஆயுர்வேதமும் படியுங்கள்' என மாணுக்கர்களுக்குச் சொல்லியதிற்கு பதில் அளித்துள்ளார் டாக்டர் பாஸ்கர மேனேன். மேனேன் அவர்களுக்கு லோக ஞானமும் ஆயுர்வேதத்தில் ஞானமும் அபாரமாயிருக்கும் போலிருக்கிறது! இல்லாமலா பேசுவார் மாணுக்கர்களின் ஆழ்ந்த அநுபவம் வாய்ந்த பரிபக்வமான ஆலோசனைகளின் படி வைத்ய சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்றும், ஆயுர்வேதம் படித்தல் ஈயனற்றதென்றும்!

டாக்டர் பாஸ்கரமேனேன்போன்ற அலோபாதிக் மேதாவிகள் ஆயுர்வேதத்தினிடம் அணுகாமலிருப்பது நல்லதே! மிகநல்லதே!

बिभेत्यल्पश्रुतात् वेदः । ஏன் ? मामसौ प्रहरिष्यति ।

## சென்னை அலோபாதிக் மாணவர்களின் கிலி

அக்டோபர் 2-வது வாரத்தில் நடந்த ஷ மாணவர் மஹா நாட்டில் 5 லக்ஷம் ரூபாய் செலவில் சென்னை மாகாணத்தில் புதிய ஆயுர்வேதக் கல்லூரிகள் ஆரம்பம் செய்ய எண்ணும் காங்கிரஸ் மந்த்ரி ஸபையின் செய்கையை பலமாகக் கண்டித்தும், ஆயுர் வேதம் அதிலுள்ள குறைகளினால் வளராது உளுத்து விட்டதென் றும், காலத்திற்கேற்றபடி வளர்ச்சி பெருது மழுங்கிய ஆயுர்வே தத்தை முன்னேற்ற நினைப்பது மகா கெடுதல் என்றும் தீர்மான த்தை நிறைவேற்றி, இருக்கும் கவர்ன்மெண்டு இந்தியன் மெடி கல் ஸ்கூலையும் அழித்து விட வேண்டுமென்றும் சொல்லியுள் ளார்கள்.

மாணவர்களே! பயப்படாதீர்கள். இப்போது ஆயுர்வேத வைத்யர்கள் சிறிதளவிலிருக்கும் பொழுதே அலோபாதிக் வைத்தி யர்களுக்கு வருமானம் குறைவாகிறதே! ஆயுர்வேதவைத்யர்கள் புதிய பள்ளிக்கூடங்களினால் அதிக எண்ணிக்கையுள்ளவர்களாக ஆகிவிடின் நமது பிற்கால வாழ்க்கை என்னவாகுமோ வென்ற கவலை உங்களுக்கு இப்போதே வேண்டாம். நீங்கள் அலோபா திக் வைத்தியத்தை முற்றிலும் இன்னமும் கற்ற பாடில்லை. ஆயுர்வேதத்தின் வாஸனை கூட அறியாத உங்களுக்கு ஆயுர்வே தத்தைப் பற்றிப் பேச என்ன யோக்யதை? ஆயுர்வேதத்தில் ஸஹஜமான குறைகள் (inherent defects) இருக்கின்றனவெ ன்று சொன்னீர்களே. இவைகளென்ன? நிருபணம் செய்து விட்டு மறு கார்யம் பாருங்கள். அக்ஞானத்தினலோ, அசூயை யினலோ அலோபாதிக் மாணவர்கள் ஆயுர்வேதாபிவிருத்தி செய் யக் கூடாதென்று சொன்னல், உடனே ஆயுர்வேத மாணவர்கள் "அலோபாதியே வெளியே போ" (quit allopathi) என்று உத் கோஷம் செய்ய மாட்டார்களா? ஏனிந்த விதண்டாவாதம்? மாணவர்கள் படிப்பைக் கவனியாது தேசிய வாதத்திலிறங்குவ தேன்?

## மத்ய ஸர்க்காரின் வைத்தியாபிவிருத்தி யோஜனைகள்.

அக்டோபர் 10-வ. டெல்லியில் நடந்த ஆரோக்கிய மந்த்ரி மார்களுடைய கூட்டத்தை ப்ரதான மந்த்ரி பண்டித நேரு அவர்கள் ஆரம்பித்து வைத்தார். இந்தியாவில் ஆரோக்கியாபிவிருத்தித் துறைகளை போர் (BHORE) கமிட்டி சிபாரிசுப்படி விசேஷமாய் நடத்த ஏற்பாடு செய்வதென்றும், இந்திய தேசீய வைத்திய முறைகளையும் நவீனரீதியில் அபிவிருத்தி செய்வதென்றும் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. ஆயுர்வேதாபிவிருத்தியின் பிரகாரம் ஒன்றும் விவரமாகத் தெரியவில்லை.

சென்னை ஸர்க்காரால் நடத்த உத்தேசித்திருந்த ஆயுர்வேத வைத்ய வித்வத் பரிஷத் இதுவரை [21—10—46] ஆரம்பமாகவில்லை. முதலில் வெளியிட்ட ப்ரகாரத்தில் நடக்காதோவெனத் தோன்றுகிறது,

* * *

இந்திய வைத்தியர்களின் A. B. வகுப்புப் பிரிவினை எடுபட்டு ஒரே வகுப்பில் ரிஜிஸ்தராக வேண்டுமென்று ஸெண்ட்ரல் போர்டு ஆப் இந்தியன் மெடிஸின்— ஆல் செய்யப்பட்டுள்ள சிபார்ஸை கவர்ன்மெண்டார் அங்கீகாரம் செய்து விட்டதாகத் தெரிகிறது. இது ஒரு பெரிய முக்கியமான விஜயம் B கிளாஸ் தேசிய வைத்யர்களுடைய விடா முயற்சியால் அடைந்துள்ளது, இனி மேல் புதிய ரிஜிஸ்தர் ஏற்படும் பிரகாரம் இன்னும் பிரகாசமாகவில்லை.

* * *

ஸெண்டிரல் போர்ட் ஆப் இண்டியன் மெடிஸினின் நியமனம் புதிய தேர்தலின் பேரில் கூடிய சீக்கிரம் நடைபெறவேண்டும். தகுந்த யோக்கியதை யுடையவர்களைத் தேர்ந்தெடுப்பதில் வைத்தியர்கள் கவனமாக இருக்க வேண்டும்.



|| श्रीः ||

औषधामृतहस्ताढ्यमादिदेवं दयानिधिम् ।
धन्वन्तरिं स्तुमः कृत्स्नलोकारोग्याधिदैवतम् ॥

# தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலமும், திருச்சி ஆயுர்வேத ஸபாவும்

*27–9–46-ல் திருச்சியில்*

*சென்னை ஆரோக்கிய இலாகா மந்த்ரீ*

ஸ்ரீமதி ருக்மிணீ லக்ஷ்மீபதி அவர்கட்கு

*அன்புடன் அளித்த*

## ஸ்வாகத பத்திரம்.

மாட்சிமை பொருந்திய மந்த்ரியாரே!

*தமிழ் நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்திற்குத் தங்களுடைய முதல் விஜய காலத்தில் தங்களுக்கு ஸ்வாகதம் கூறும் பாக்கியம் இன்று ஏற்பட்டதென எங்களுடைய ஆனந்தம் அபரிமிதமாகவுள்ளது. தங்களுடைய பல காரியங்களுக்கிடையே எங்களுடைய அழைப்புக்கிணங்கி இங்கு விஜயம் செய்ததற்கு எங்கள் அந்தரங்க க்ருதஜ்ஞதையைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.*

*லோக பரிவிருத்தியில் கடும் சோதனை காலமாகிய இப்பொழுது, நமது சொந்தத் தலைவர்கள் தேச பரிபாலனத்தில் அதிகாரம் அகில இந்தியாவிலும் பெற்று விளங்குகின்றனர். நம் க்ஷேமத்திற்கு இனி கவலை இராது என்ற விசுவாசமும் சந்தோஷமும் இன்று எல்லா இந்திய மக்களிடமும் பிரகாசிக்கின்றன.*

*விசேஷமாய் 'காங்கிரஸ் அதிகாரம் வகித்தாலும் நம் ஆயுர்வேதத்தின் கதி எவ்வாறாகுமோ; சென்னையின் முந்*

திய காங்க்ரஸ் கவர்ன்மெண்டில் ஆயுர்வேதத்துக்குக் கஷ்டம் வளர்ந்ததே' என்ற தேசீய வைத்தியர்களுடைய பெரும் சம்சயத்தை தாங்கள் ஆரோக்கிய இலாகா மந்த்ரிபதவியை ஏற்ற தத் க்ஷணத்திலேயே அகற்றி, ஆயுர்வேதாபிவிருத்தி விஷயத்தில் பேச்சளவில் நிற்காது அனுஷ்டானத்திலும் உடனடியில் ஆரம்பித்து விட்டீர்கள் என்று ஆயுர்வேத வைத்யர்கள் அறிந்து அடைந்துள்ள ஆனந்தத்துக்கு அளவில்லை.

மேலும், அஜ்ஞானத்தாலோ, அசூயையினாலோ ஆயுர்வேதாபிவிருத்தியை ஸஹிக்காது த்வேஷிக்கும் சில உள் நாட்டு விதேசிய வைத்யர்களுடைய எதிர்ப்பை லக்ஷ்யம் செய்யாமல், ஆயுர்வேதத்தின் த்ரிகால சத்தியமான உத்தம மகிமையை உணர்ந்து, ஆயுர்வேதாபிவிருத்தியில் தாங்கள் அந்தரங்கம் கொண்டுள்ளதை யார் தான் சிலாகிக்கமாட்டார்கள் ?

அவ்விதமே தற்சமயம் அனுஷ்டிக்கப் படும் ஆயுர்வேதாபிவிருத்தி வழிகளில் தென்படும் குறைகளைப் பூர்ண ஒத்துழைப்பு ஹ்ருதயத்துடன் நாங்கள் தெளிவு படுத்துவதை தாங்கள் ஸ்வீகாரம் செய்து குறைகளை அகற்றுவீர்களென்று நாங்கள் த்ருடமாய் நம்புகிறோம்.

ஸங்க்ரஹமாக— கவர்ன்மெண்டார் ஆயுர்வேதாபிவிருத்தி விஷயத்தில், க்ஞானம்சத்தைக் கருதாமல் எண்ணிக்கையை மட்டும் பெருக்கும் மனப்பான்மையிலிருப்பதாகத் தோற்றுகிறது. க்ஞானத்துடன் கூடிய எண்ணிக்கையைப் பெருக்குவதே யதார்த்தமான அபிவ்ருத்தியாகும். ஒவ்வொரு கலையும் அதனதன் வழியில் விருத்தியாவதே ஸத்தியமான விருத்தியாகுமென்பது தாங்களறியாததல்ல.

எங்கள் பிரார்த்தனைக்கிணங்கி இந்த ஸபைக்கு விஜயம் செய்ததற்கு வந்தனமளிக்கிறோம்.

தங்கள் ஆயுர்வேதாபிமானத்தைப் பாராட்டும்,

திருச்சினப்பள்ளி, தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின்
27—9—1946 அங்கத்தினர்கள்.

विजयतामायुर्वेदो धिजयताम् !!

ஷ ஸ்வாகத பத்திரத்தை இரு ஸபைகளின் தலைவரான திருச்சி ஆயுர்வேதாசார்ய ஸ்ரீமான் வி. பி, நடராஜ சாஸ்த்ரிகள் அவர்கள் வாசித்துக் கொடுத்தார்கள்.

கனம் ஸ்ரீமதி ருக்மிணி லக்ஷ்மீபதி அவர்கள் ஸ்வாகதபத்திரத்துக்குப் பதிலளிக்கையில், ஆயுர்வேத சாஸ்திரத்தின் மேன்மையையும், ஆயுர்வேத வைத்யர்கள் மேல் நாட்டு வைத்யங்களிலிருந்து எடுத்துக் கொள்ளவேண்டிய அம்சங்களையும், சென்னை காங்க்ரஸ் ஸர்க்கார் ஆயுர்வேதாபிவிருத்தியின் பொருட்டு எடுத்துக் கொண்டுள்ள முயற்சியைக் குறித்தும், தான் செய்ய எண்ணியிருக்கும் காரியங்களுக்கு ஆயுர்வேத வைத்யர்களின் ஒத்துழைப்பைக் கோருவதாகவும் சொன்னார். ஸபைகளின் தலைவர் ஸ்ரீமான் வி. பி. நடராஜ சாஸ்த்ரிகள் பேசுகையில், ஆயுர்வேத அபிவிருத்தி விஷயத்தில் ஸர்க்கார் செய்து கொண்டிருக்கும் காரியங்களில் உள்ள குறைகளைக் குறிப்பிட்டு விட்டு, அபிவிருத்தி செய்ய வேண்டிய சரியான மார்க்கங்களையும் எடுத்துரைத்தார்.

கூட்டத் தலைவர் ஸ்ரீரங்கம் ஸ்ரீமான் வி. சுப்ரமணிய அய்யர் பேசும் பொழுது, ஆயுர்வேத அபிவிருத்தியில் சென்னை காங்க்ரஸ் ஸர்க்கார் எடுத்துக் கொண்டிருக்கும் ஊக்கத்தையும், முயற்சியையும் பாராட்டிப் பேசி, எவ்வெவ்விதமாகக் காரியங்களைச் செய்ய வேண்டுமெனவும் கூறி முடித்தார்.

மண்டல கார்ய தர்சி கரூர் வைத்ய வாசஸ்பதி ஸ்ரீமான் பி. எஸ். ராம சர்மா அவர்களுடைய வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

# அறிவிப்பு.

தமிழ் நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின் 14-வது ஸம்மே ளனம் ஸ்ரீ சிதம்பர க்ஷேத்ரத்தில் நடை பெறும். ஆயுர்வேத ஸாஹித்ய சிரோமணி ஸ்ரீ பி. எஸ். ஸ்ரீநிவாஸய்யர் வரவேற்பு சங்கத்தின் பிரதான கார்யதர்சி. ஸம்மேளன தேதி சீக்கிரத்தில் தினசரிப் பத்திரிகைகள் மூலம் அறிவிக்கப் படும், ஷை ஸம்மே ளன ஸம்பந்தமான ஸகல விஷயங்களும் 'கார்யதர்சி, 14-வது தமிழ் நாடு ஆயுர்வேத ஸம்மேளனம், C/o. ஆயுர்வேத அமிருத நிலயம், தெற்கு வீதி, சிதம்பரம்.' என்ற விலாஸ்த்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

14-வது ஸம்மேளனத்தை அனுசரித்து நடக்கும் தங்கப் பதக்கப் பரிசுள்ள கட்டுரைப் போட்டிகளுக்குக் கட்டுரைகளை அனுப்பும் கடைசீ தேதி நவம்பர்மீ 15. வைத்ய வித்வான்கள் கட்டுரைகளைக் காலத்தில் அனுப்பப் பிரார்த்திக்கப் படுகிறார்கள்.

மண்டலத்தின் வருஷ சந்தா ரூபாய் மூன்றை (3-0-0) இது வரை அனுப்பாதவர்கள் தயவு செய்து உடனே மணியார்டர் மூல மாக அனுப்பி விடவேண்டும். மண்டலம் வைத்திய சந்திரிகா மூலம் அதிக பணச் செலவை பிரதி மாதமும் செய்ய வேண்டியி ருக்கிறது. ஆதலால் தங்கள் சந்தாவை அனுப்புவதுடன் வைத் யர்கள்—வைத்யாபிமானிகள் எல்லோரையும் மண்டல அங்கத்தி னர்களாகவும் சந்திரிகைக்கு சந்தாதாரர்களாகவும் சேர்த்து உதவி செய்ய வேண்டப் படுகிறது.

P. S. ராம சர்மா,

பொதுக்காரியதர்சி,

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்,

கரூர், S. I. R.

---

Printed and Published by Dr. S. M. Sundararajacharya
at the Sri Vilasam Press, Srirangam.